# مسالك الحنفاء في المصطفى ﷺ والدي

# சுந்தர நபியின் சுவனத்துப் பெற்றோர்


تأليف:

خاتم المحدثين علامة العصر

الامام جلال الدين السيوطي عليه رحمة الباري

مترجم في اللغة التاملية:

سماحة الشيخ مخدوم الملة والدين الشاه السيد

عبد العزيز مولانا خوشحالي دامت بركاتهم القدسية

# சுந்தர நபியின் சுவனத்துப் பெற்றோர்

மூல ஆசிரியர் :

முபஸ்ஸிருல் குர்ஆன் அல்லாமா அல்ஹாபிழ்

**ஜலாலுத்தீன் சுயூத்தி ரஹிமஹுல்லாஹ்**

தமிழாக்கம் :

ஃபஸீலத்துஷ் ஷெய்க் அஸ்ஸெய்யிது

**அப்துல் அஸீஸ் மௌலானா குஷ்ஹாலி**

**தவ்வலல்லாஹு ஹயாதஹு**

© Copyright Reserved

பதிப்புரிமை ஆசிரியருக்கே

**இந்நூல் அன்பளிப்புக்குரியது**
**விற்பனைக்கு அல்ல.**

Designed & Printed by :

**RABBANIA PRINTING PRESS, TRICHY, INDIA.**

Ph : 0431 - 701685. E-Mail: maswood@eth.net

நூலின் பெயர் : **சுந்தர நபியின் சுவனத்துப் பெற்றோர்**

மூல ஆசிரியர் : **முபஸ்ஸிருல் குர்ஆன் அல்லாமா ஹாபிழ் ஜலாலுத்தீன் சுயூத்தி ரஹ்மத்துல்லாஹி அலைஹி**

தமிழாக்கம் : **ஃபளீலத்துஷ் ஷெய்க் அஸ்ஸெய்யிது அப்துல் அஸீஸ் மௌலானா குஷ்ஹாலி தவ்வலல்லாஹு ஹயாதஹு**


பக்கம் : **168**

தொடர் இலக்கம் : **11**

முதற் பதிப்பு : **ஜூன் 2000**
**1421 ரபீவுல் அவ்வல்**

வெளியீடு : **ஜம்மிய்யதுல் இஷாஅத்தி அஹ்லுஸ் ஸுன்னா**
105, 2-ம் குறுக்குத் தெரு,
கொழும்பு-11. போன் : 01466113

அச்சிட்டோர் : **ரப்பானியா பிரிண்டிங் பிரஸ்**
16, மதுரை ரோடு, திருச்சி-8.
தென்னிந்தியா. போன் : 0431-701685
E-Mail : maswood@eth.net



# எமது வெளியீடுகளில் சில :

1. பாங்கில் திருநபியின் திருநாமம் கேட்டு விரல்களை முத்த வேண்டுமா?
2. கப்ருகளின் மீது கட்டிடம் கட்டலாமா?
3. இறைநேசர்களின் கப்ருகளை முத்தமிடலாமா?
4. ஸியாரத்தை நோக்கிப் பயணம்
5. வஸீலா
6. தராவீஹ் தொழுகையின் எண்ணிக்கை
7. அண்ணலாரின் அகமியம்
8. உத்தமர் உதயம்
9. மௌலிது ஓதுவோம் வாருங்கள்
10. முத்தமிடல்

JAMIYATUL-ISAATHI-AHLUS-SUNNA
No.105, Second Street, Colombo - 11. Sri Lanka
Tel : 466113; Fax : 449055

## Following are the Addresses where the Book is Available (Free of cost)

**INDIA**

KHANKQA - HE _ KHUSHALIYA
Chillagah Shariff Bihar Gad, Mourna Post
Dist Muzafar Nagar, U.P. India

MUASKAR WOMEN'S ARABIC COLLEGE
Cholukkar Street,
KAYALPATNAM - 628 204. S. India

**SRI LANKA**

JAMEEAT-UL-ISHAATHI AHLUS SUNNAH
105, Second Cross Street, Colombo-11
Sri Lanka. Phone : 466113, Fax : 449055

**PAKISTAN**

ASTANA-E-KHUSHHALIA
10/19, Muhammadi park, Sanad Road, Lahore

**U.S.A.**

JAMEEAT-UL-ISHAATHI AHLUS SUNNAH
436, Broad Street, Bristol Canaticut-06010
U.S.A.

**CANADA**

M. YUSUF VHQRA
15, Windsomg Court Markham, Ontario
Canada. L3r-8n7, 1-905-479-9483

**SOUTH AFRICA**

DARUL ULOOM PRETORIA
P.o. Box : 14296, Laudim-0037, Pretoria
Tel : (27-12-3741721

Izzathul Shamila Shamsudeen

# சமர்ப்பணம்

இச்சிறு நூலினை

நபிகள் நாயகம் ﷺ அவர்களின்

மேன்மைமிகு பெற்றோர்களுக்கு

சமர்ப்பணம் செய்கின்றேன்.

بسم الله الرحمن الرحيم

காயல் நகர பெரிய ஜும்மாப் பள்ளி கதீபும், முஅஸ்கரிய்யா மகளிர் அரபிக் கல்லூரியின் முதல்வரும், நிர்வாகியுமான

**H.A. அஹ்மது அப்துல் காதிர் ஆலிம் மஹ்ழரி**

அவர்கள் மனமுவந்தளித்த

# அணிந்துரை

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் பெயர் கூறி அருள் நாடி ஏந்தல் நபிகள் ﷺ அவர்கள்மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறி

நபி ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் படைக்கப்பட்ட காலம் தொடுத்து துவங்கிவிட்ட சர்ச்சை யாவற்றிலும் வியாபித்து நிற்கிறது. உண்மையை பொய்யாக்கவும், பொய்யை மெய்யாக்கவும் முனைந்த போதெல்லாம் இச்சர்ச்சை நிகழ்ந்திருக்கிறது. சத்தியத்தை அசுத்தப்படுத்திட வேண்டி கங்கனம் கட்டிக் கொண்டு சர்ச்சைகள் புரிந்தபோது அதனை அழித்தொழித்திட நல்லறிஞர்கள் ஆர்த்தெழுந்த வரலாறுகள் பலஉண்டு.

இன்றைய காலத்தில் இத்தகைய சர்ச்சைகளுக்கு பஞ்சமில்லை. அற்ப விஷயத்திற்கும் ஆயிரத்தெட்டு

பக்கத்தில் இத்தகைய வழக்குகள் நடைபெறுவதை காணமுடிகிறது. அர்த்தமற்ற விடயங்களுக்கும் இத்தகைய வார்த்தை யுத்தங்கள் நடத்தப்படுவதை அவதானிக்க முடிகிறது. இது இப்படியிருக்க,

சத்திய இஸ்லாமின் சாந்த வழியில் அவ்வப்போது பல சர்ச்சை பள்ளங்கள் தோண்டப்படுவதுண்டு. இஸ்லாமின் அழகுதோற்றமும் அதன் எழில்மிகு நடைமுறையும் அதன் எளிய செயல்பாடும் யாரை பொறுமை கொள்ளச் செய்ததோ அவர்கள் அவ்வப்போது இந்த பள்ளங்களை தோண்டி இடையூறு செய்வதுடன் சிலபொழுது அதன் வழியில் பெரும் பாதாளங்களையும் உற்பத்தி செய்வதுண்டு. அத்தகைய பாதாளங்களில் ஒன்றுதான் நம் உயிரினும் மேலான கண்மணி ﷺ அவர்களின் பெற்றோரின் புனிதம் குறித்த சர்ச்சை.

நபிகள் வந்த வழியை அசுத்தப்படுத்துவதின் மூலம் கண்மணி நபி ﷺ அவர்களையே அசுத்தப்படுத்தி விடலாம் என்ற தீயநோக்கோடு அப்புனித பெற்றோர் மீது அழுக்கை தூக்கி வீச முயன்ற தீயோர் ''தான் தோண்டிய குழி தனக்கே ஆகியது'' என்ற மொழிக் கேற்ப அவ்வழுக்கை தன்மீதே வீசி எறிந்திருப்பதை யும், அம்மானிட புனிதர்களின் புனிதம் மகத்தானது, மாண்பானது, அருளாளன் அல்லாஹ்வால் அங்கீரிக்கப் பட்டது என்பதனையும் இவ்வரிய நூல் (சுந்தர நபியின் சுவனத்துப் பெற்றோர்) தெளிவுபடுத்துகிறது.

அறிவுக்கேந்திரம் இமாம் சுயூத்தி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களின் ''மஸாலிகுல் ஹுனஃபாஃ ஃபீ வாலிதையில் முஸ்தஃபா'' என்ற நூலை பெரிதும் அடிப் படையாகக் கொண்டு எனது ஆன்மீக நாதர் தொகுத் திருக்கும் இவ்வரிய பொக்கிஷம் சர்ச்சைகளை நீக்கும்

வரலாற்று பாதையில் மேலும் ஒரு மைல் கல் ஆகும்.

கருணை நபிகள் பூமான் ﷺ அவர்களின் கண்ணியமிகு பெற்றோரான ஹழ்ரத் அப்துல்லாஹ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களும், ஹழ்ரத் அன்னை ஆமினா ரலியல்லாஹு அன்ஹா அவர்களும் சுகந்தம் தரும் சுவனத்தின் சுந்தர மலர்களேயாவர் என்பதனை சுருதி குன்றாத ஆதாரங்களோடு இவ்வற்புத நூல் விளக்குகிறது.

சக்தியும் சந்தன மணமும் கொண்ட இச்சிறப்புமிகு நூலுக்கு அணிந்துரை எழுதியதின் மூலம் எனது அணிந்துரைக்கு மணம் கிடைத்து விட்டது.

வல்ல அல்லாஹ்வின் வாகான தூதர் ஹபீப் ﷺ அவர்களின் வாஞ்சைமிகு பெற்றோரின் புனிதத்தை எடுத்தியம்பிடும் இப்பெரும் பணியை கபூல் செய்து அருள் பாலிப்பானாக. ஆமீன்.

ஸல்லல்லாஹு அலா முஹம்மத்
ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

**- முஅஸ்கரி -**

# உள்ளே உள்ளவை


1. சுந்தர நபியின் சுவனத்துப் பெற்றோர் 1
2. நன்றி செலுத்தும் முறை 8
3. ஹதீத் அடிப்படையிலான ஆதாரங்கள் 13
4. நபி ﷺ அவர்களின் பெற்றோர் நிலை 29
5. மறுத்திருக்க மாட்டார்கள் 31
6. நபிகள் ﷺ அவர்களின் மூதாதையர்கள் அக்கால மக்களில் சிறந்தவர்கள் 41
7. கேள்வியும், பதிலும் 49
8. நபிமார்களின் பெற்றோர் இறைமறுப்பாளர்கள் அல்ல 51
9. எல்லோரையும் விட உயர்ந்தவர்கள் சிறந்தவர்கள் 55
10. இரண்டாம் விடயத்திற்கான ஆதாரங்கள் 57
11. ஆஸருக்காக மன்னிப்புக் கோருவதை விட்டு விடல் 71
12. நபி இப்ராஹீம் அவர்களது சந்ததியினரின் அகீதா 76
13. அங்கீகரிக்கப்பட்ட பிரார்த்தனை 83
14. கஃபாவின் பொறுப்பாளர்கள் 85
15. நித்திய மார்க்கத்தில் நிலைத்து நின்ற சந்ததியினர் 87
16. நபியவர்களின் முன்னோரைக் கொண்டு வஸீலா 89
17. கருணை நபி பெற்றோரை கண்ணியப்படுத்துங்கள் 90
18. ஹழ்ரத் அப்துல் முத்தலிப் பற்றிய முக்கருத்துக்கள் 93
19. ஹழ்ரத் அபூதாலிபின் நிலை 94
20. ஹழ்ரத் அப்துல் முத்தலிப் கியாம நாள் மீது ஈமான் 95
21. நபி ﷺ அவர்களின் பெற்றோர் 100
22. அன்னை ஆமினா ரலியல்லாஹு அன்ஹா நிலை 102
23. ஜஹீமிற்கு உரியோர் 115
24. சத்திய மார்க்கத்தில் நித்திய நபியின் பெற்றோர் 121
25. அலசிப்பார்த்தல் 130

الصلوة والسلام عليك ياخير خلق الله وياجرى رسول الله
صلى الله عليه وآله وسلم عدد الحروف والكلمات

# என்னுரை

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் பெயர்கூறி, அருள் நாடி ஏந்தல்நபி ﷺ அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறி

தன்னை மக்களிடம் அறிமுகப்படுத்துவதற்காக இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் நபிமார்கள். இத்தகைய நபிமார்கள் பாவங்களை விட்டும் பாதுகாக்கப் பட்ட பரிசுத்தவான்களாகவும், உடல் மற்றும் உள்ள அமைப்பில் பரிபூரணமானவர்களாகவும் திகழ்ந்தார் கள். அப்படி பூரணத்துவம் வாய்ந்தவர்களாக இருக்க வேண்டுமென்பது இறைவனின் நாட்டமாகும்.

வல்ல அல்லாஹ் இந்நபிமார்களின் சொல் செயல் களை தூய்மையானதாகவும் ஆக்கி அவைகளை சமுதாயத் தினர் பின்பற்றும் வழிமுறையாகவும் ஆக்கினான். அவர்களுக்கான சோதனை கேள்விகளை வழங்கிய நாயன் அவற்றில் அவர்கள் வெற்றி பெற்றிடும் மன உறுதி யையும் தந்தான்.

அவர்களின் பொறுமையும், சீரிய செயல்பாடும் திட்டமிட்டு செயல்படும் நடவடிக்கைகளும், உயர்ந்த ஒழுக்க பண்புகளும் உன்னதமான போதனைகளும் உலக மொத்தமும் பின்பற்ற தகுதியானவையாக ஆயின.

அவர்களின் இல்லற வாழ்வும், பொதுவாழ்வும் இரகசியகத்திற்குட்பட்டதாக இல்லாமல் மக்கள் மன்றத்தின் முன்வைக்கப்பட்ட திறந்த புத்தகமாக திகழ்கிறது.

உண்பது, குடிப்பது, உறங்குவது, உறவாடுவது, தொழிலில் ஈடுபடுவது, இறைவணக்கம் புரிவது, உடுப்பது, உறவு கொள்வது, மலஜல உபாதைகளை சுத்தி செய்வது என அனைத்து நிலைகளிலும் முழு மனித உலகமும் நடந்து கொள்ள வேண்டிய அனைத்து நடைமுறைகளையும் கற்பிக்கும் ஆசான்களாக நபிமார்கள் திகழ்ந்தனர். இதனாலன்றோ,

قد كانت لكم اسوة حسنة في ابراهيم (الممتحنة)

ஹழ்ரத் இப்ராஹீம் நபியிடமும், அவர்களுடன் இருந்தோரிடமும் உங்களுக்கு திட்டமாக அழகிய முன்மாதிரி இருக்கிறது என்றும்,

لقد كان لكم في رسول الله اسوة حسنة (احزاب)

உங்களில் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் ஆதரவு வைத்து அல்லாஹ்வை அதிகமாக திக்ரு செய்கின்றவருக்கு அல்லாஹ்வின் தூதரிடத்தில் அழகிய முன்மாதிரி திட்டமாக இருக்கிறது என்றும் வல்ல அல்லாஹ் தனது வான்மறையில் வகைபடுத்திக் கூறுகிறான்.

நம் உயிரினும் மேலான கண்மணி நாயகம் صلى الله عليه وآله وسلم அவர்கள் இதுகுறித்து இயம்பும்போது,

انما بعثت لاتمم مكارم الاخلاق

நான் அனுப்பப்பட்டதெல்லாம் சங்கைமிகு குணங்களை செம்மையாக்கிடத் தான் என்றும்,

انّما بعثت معلّما

நான் அனுப்பப்பட்டதெல்லாம் உங்களுக்கு கற்றுத் தருவதற்காகத்தான் என்றும் கூறியுள்ளார்கள்.

இத்தனை சிறப்புமிகு நபிமார்களை அல்லாஹ் தேர்ந்தெடுத்து அனுப்புகிறான் எனில் அவர்களின் பாரம்பர்யமும் சிறப்புமிக்கதாக இருக்க வேண்டுமல்லவா?

இன்றைய "ஜீன்ஸ்" ஆராய்ச்சியில் மனிதனின் குண நிற தொடர்புகள் என்பது வாழையடி வாழையாக தொடரக் கூடியது என தெரிய வந்துள்ளது.

இப்படி இவ்விஷயம் இருக்கும் பட்சத்தில் ஒரு சமுதாயத்தின் வழிகாட்டியாகவும் அல்லாஹ்வின் தூதுப்பணியை செயல்படுத்தி இறைவன்பால் மக்களை அழைப்பவராகவும் திகழும் ஒரு நபியின் பாரம்பர்யம் எத்துணை தூய்மை வாய்ந்ததாக இருக்க வேண்டும்! அதிலும் குறிப்பாக அண்ணலெம் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் வமிஷத் தொடர் எத்துணை மேன்மை வாய்ந்ததாக தூய்மையினும் தூய்மையானதாக இருக்க வேண்டும். ஏனெனில் பிற நபிமார்கள் ஒரு சமூகத்திற்கு தான் வழிகாட்டிகளாக வந்தார்கள். ஆனால் எம் கோமான் நாயகம் ﷺ முழு மனித சமுதாயத்திற்கு மட்டுமின்றி பிற படைப்பினங்களுக்கும் நபியாக அருளப் பெற்றார்கள்.

எனவே அவர்களது பாரம்பர்யம், அவர்கள் வமிஷத் தொடர் புனிதமும், தூய்மையும் மிக்கதாக ஆகியிருப்பது அவசியத்திலும் அவசியம்.

நிற்க.

இன்று நபித்துவத்தின் மகத்துவத்தையும், அருள்

நிறை போதனைகளின் அடிப்படைக்கூற்றையும் உண ராத அல்லது உணர விரும்பாத அல்லது உணர்ந்தும் காழ்ப்புணர்ச்சியால் இதயம் கருத்துவிட்ட சிலர் வள் ளல் நபியின் வனப்பான வமிஷத் தொடரை குறைகூறி வருவதை அவதானிக்க முடிகிறது. அரைகுறை அறிவால் அல்லது அறிவின்மையை அறிவு என்று கருதுவதின் அறியாமையால் காருண்ய நபியின் கண் ணிய வமிஷத் தொடரை விமர்சிக்கிருர்கள். அவர்களின் கூற்று பொய்யானது. பொருத்தமற்றது. வம்பானது. வசைபாட தகுதியானது எனினும் இதுபற்றி விமர்சிக்க விரும்பாமல் அருமை நபிகள் பூமான் ﷺ அவர்களின் அற்புத வமிஷத் தொடரின் புனிதத்தை இமாம்களான அறிஞர் பெருமக்கள் தந்த ஆதார தூண்கள் கொண்டு தெளிவுபடுத்தியிருக்கிறேன்.

அருளும் ஆசியும் வழங்கும் வல்ல அல்லாஹ் அவனது பெரும் கருணையாலும், அவனது ஹபீப் எமது பேரின்ப நபி ﷺ அவர்களின் பொருட் டாலும் இப்பணியை அங்கீகரித்து படிப்போர் யாவருக்கும் பயன்தரத்தக்க தாக ஆக்கியருள்வாஞக. ஆமீன்.

**காதிமுஷ் ஷெய்க் ஸெய்யித் அப்துல் அஸீஸ்**
**மௌலாஞ குஷ்ஹாலி**

اللهم صلّ على سيّدنا ومولانا محمّد وعلى آل سيدنا
ومولانا محمّد صلوة تنجينا من جميع الاهوال والآفات وتطهرنا
بها من جميع السّيّآت وترفعنا بها اعلى الدّرجات وتقضي لنا بها
جميع الحاجات وتبلغنا بها اقصى الغايات من جميع الخيرات
في الحيوة وبعد الممات يا ربّ العالمين

# சுந்தர நபியின் சுவனத்துப் பெற்றோர்

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ் என்ற திருநாமத்தால் ஆரம்பம் செய்கிறேன். கிருபையும், கருணையும் மிகுந்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். வல்லவனாம் அல்லாஹ், அவனது திருத்தூதர் நபிகள் நாயகம் ﷺ அவர்கள்மீதும், அவன் பொருந்திக் கொண்ட அத்துணை பேர் மீதும் ஸலவாத் எனும் சாந்தியையும் ஸலாம் எனும் ஈடேற்றத்தையும் நின்று நிலவச் செய்வானாக!

**நூலின் நோக்கம் :**

இஸ்லாமியத்தின் பார்வையில் இருலோக இரட்சகர்

மாநபி ﷺ அவர்களின் பெற்றோர் சுவனவாதிகளே! அப்பெருமக்கள் இருவரும் நரகத்திலிருந்து தூரமாக்கப்பட்டவர்கள். அவர்கள் நரகத்துள் நுழைக்கப்படமாட்டார்கள் என உலமாக்களான இறையறிந்த அறிஞர் பெருமக்கள் தெளிவாகவும், விரிவாகவும் எடுத்து இயம்பியதை இங்கே வரிசைப்படுத்திக் காட்டுவதே இந்நூலின் நோக்கம்.

## வசனம் ஒன்று

وما كنّا معذّبين حتّى نبعث رسولا (الاسراء - ١٧)

நாம் அவர்களுக்கு மத்தியில் ரசூலை (தூதரை) அனுப்பாதவரை அச்சமூகத்தாரை (நாம்) தண்டிப்போராயில்லை.

இவ்வசனம் நபி வருகை தராத ஒரு சமூகம் தண்டிக்கப்பட மாட்டாது என்பதனை தெளிவுபடுத்துகிறது. அவ்வாறிருக்க திருநபி ﷺ அவர்களின் மாண்பான பெற்றோர் நபியவர்களின் நபித்துவம் வெளியாகும் முன்னரே மரணித்து விட எப்படி தண்டிக்கப்படுவார்கள். எமது இமாம்களாகிய அஷாயிரிய்யாக்களின் கருத்தும் மேற்கூறிய விஷயத்தை உறுதிப்படுத்துகிறது. இந்த விடயத்தில் ஷாஃபி மத்ஹபைச் சார்ந்த அனைத்து மார்க்க நிபுணர்களும் ஏகோபித்த கருத்தை வழங்கியுள்ளனர். ஒருவன் நபித்துவத்திற்கு முன்போ (அதாவது இஸ்லாம் வெளியாகும் முன்போ) அல்லது இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும்படியான (தஃவா) அழைப்பு அவனை அடையுமுன்போ அவன் மரணித்து விட்டால் அவனை ஈடேற்றம் பெற்றவனாக (நாஜியாக) வே கணிக்கப்படும்.

பொதுவாக இஸ்லாமியத்தை ஏற்குமாறு அழைப்பு கொடுக்கப்பட வேண்டும். அவ்வழைப்பை ஏற்க

மறுத்து யாராவது எதிர்த்தாலே அவருடன் போரிட வேண்டும். அவ்வாறன்றி ஒருவன் கொலை செய்யப் பட்டால் அதற்காக நஷ்டஈடு வழங்க வேண்டும். இந்த தீர்ப்பினை இமாம் ஷாஃபிஈ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களும், அவர்களின் தோழர்களும் அங்கீகரித் துள்ளனர். ஒருசிலர் அப்படி வெட்டியதற்காக 'கியாஸ்' 'பழிக்குப்பழி' வாங்குவது வாஜிபு என கருதுகின்றனர். ஆனால் உண்மையில் இக்கருத்து ஏற்கத்தக்கதல்ல. ஏனெனில் கொல்லப்பட்டவன் முஸ்லிம் அல்லவே! கியாஸின் நிபந்தனையோ, கொல்லப்பட்டவன் கொலை யாளிக்கு நிகரானவனாக இருத்தல் வேண்டும் என்று குறிப்பிடுகிறது. இஸ்லாமின் அழைப்பு சென்றடையு முன் ஒருவன் மரணித்து விட்டால் அவன் தண்டனைக்கு உரியவன் அல்ல என்று கூறும் சில ஃபுகஹாக்கள் (சட்ட நிபுணர்கள்) சில நிபந்தனைகளையும் அவ்வாறு தண்டிக்கப்படாதிருப்பதற்கு எடுத்தியம்புகின்றனர்.

முதலாவது:- அவன் உண்மையில் ஃபத்ரத்தில் (சத்திய நித்திய மார்க்கம் எதுவென அறியப்படாத நிலை யில்) மரணித்திருக்க வேண்டும்.

இரண்டாவது:- முந்தைய (மார்க்கம் பற்றிய) விஷயத்தையோ அல்லது வரப்போகும் (முன்னறிவு செய்யப்பட்ட) விஷயத்தையோ அவன் மறுக்காத வனாக இருந்திருக்க வேண்டும்.

மூன்றாவது:- அவன் நலவையும், தீயதையும் பிரித்தறியும் வயதை அடைந்ததிலிருந்து கண்களை மூடிக் கொள்ளும் நேரம்வரை எந்த நபி அல்லது ரசூல் பற்றிய தகவலையும் அறியாதவனாக இருத்தல் வேண்டும்.

நான்காவது:- ஒருவேளை அவனுக்கு ஒரு நபி பற் றிய தகவல் கிடைத்திருந்தால் அதனை அவன் மறுக்காத வனாயிருத்தல் வேண்டும்.

எங்களின் ஷெய்கு ஷெய்குல் இஸ்லாம் இமாம் ஷரஃபுத்தீன் மனாவி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர் களிடத்தில் நபிகள் பூமான் ﷺ அவர்களின் பெற்ரோர் இருவரும் நரகத்திலா உள்ளனர்? என ஒருவர் வினவிய பொழுது, இமாமவர்கள் அம்மனிதர் மீது வெகுண்டெழுந்தனர். தொடர்ந்து அம்மனிதர் அவர்கள் இஸ்லாமை ஏற்றுக் கொண்டதற்கான ஆதாரம் ஏதும் உண்டா? என கேட்டபோது, நபிகளின் பெற்ரோர் ஃபத்ரத்தில் மறைந்துள்ளனர். நபித்துவம் வெளிப்படு முன் மரணித்தவர்களுக்கு தண்டனை இல்லை என இமாம் கூறினார்கள்.

அத்துடன் திருநபி ﷺ அவர்களின் பெற்ரோர் உயிர்ப்பிக்கப்பட்டு (அவர்கள் இஸ்லாமை ஏற்றுக் கொண்டதற்கான) ஆதாரம் ஹதீதில் இருக்கிறது என்று தம் பாட்டனர் கூறியுள்ளார்கள் என்று கூறும் இமாம் மனாவி ரஹ்மத்துல்லாஹி அலைஹியவர்கள் இது தொடர்பாக அருள்மறை வாக்கியமான "வமா குன்னு முஅத்திபீன ரசூலா" என்னும் வாக்கியத்தை எடுத் துரைத்தார்கள்.

திருநபி ﷺ அவர்களின் பெற்ரோரை தஃவா - அழைப்பு சென்றடையாதிருக்கையில் அவர்கள் எப்படி குற்றவாளிகளாக கணிக்கப்படுவர்?

முஸ்லிம் ஷரீஃபின் விரிவுரையில் இமாம் நவவி ரஹ்மத்துல்லாஹி அலைஹியவர்கள் மேற்கூறிய கருத் தில் உறுதியும் நம்பிக்கையும் தெரிவித்துள்ளார்கள். இதுபற்றி அவர்கள் குறிப்பிடும்போது,

நிச்சயமாக சந்தேகத்திற்கிடமின்றி ஃபத்ரத்தில் மரணித்தவர்களை அல்லாஹ் மறுமையில் பரீட்சிப்பான் என ஹதீது வந்துள்ளதால் அதற்கு முன் அவர்கள்

தண்டிக்கப்பட மாட்டார்கள். இதற்கு குர்ஆனே ஆதார மாக உள்ளது.

இக்கருத்தினை ஹாஃபிழுல் அஸ்ர் ஷெய்குல் இஸ் லாம் அல்லாமா இப்னு ஹஜரில் அஸ்கலானி ரஹ்மத் துல்லாஹி அலைஹியவர்கள் வலியுறுத்திக் கூறும் போது, எம் நபிகள் பிரான் ﷺ அவர்களின் அருமைப் பெற்றோர் நபித்துவம் வெளிப்படுமுன் மரணித்து விட்டதால் மறுமை நாளில் அவர்கள் பரீட்சிக் கப்படுவார்கள். அப்போது அதில் ஜெயம் பெறுவார் கள் என நல்லெண்ணம் கொள்வது அவசியம். இப்படி நபி பூமான் ﷺ அவர்களைச் சங்கைபடுத்தும் போது அவர்கள் கண்கள் குளிர்ச்சியடையும் என குறிப்பிட்டுள்ளார்கள்.

மேற்கூறப்பட்ட இந்த ஹதீது அல் இஸாபா என்ற கிரந்தத்தில் பதியப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். அந்த ஹதீதிலே வயது முதிர்ந்தோர், ஃபத்ரத்துடைய காலத்தில் மரணித்தோர், செவிடர், பார்வையற்றவர், ஊமை, பிறப்பிலே அல்லது வாலிபப் பருவத்தை அடையுமுன் மூளை வளர்ச்சியை இழந்தோர் முதலானோரைப் பற்றி குறிப்பிடப்படுகிறது. இந்த ஹதீதை பல ராவிகளைக் கொண்டு அறிவிக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற பல அறிவிப்புகள் ஹதீது கிரந்தங்களில் காணப்படுகிறது.

மேலே குறிப்பிட்ட வகுப்பினர் நாளை மறுமையில் இறைவா! நாங்கள் புத்தியுள்ளவர்களாக இருந்து எங்களிடம் உனது கட்டளையை எடுத்துரைக்கக்கூடிய ஒருவர் வந்திருப்பின் நிச்சயமாக நாங்கள் ஈமான் கொண்டிருப்போம் என அல்லாஹ்வின் சமூகத்தில் கூறுவர். இத்தகையோரை சோதித்துப் பார்ப்பதற்காக அல்லாஹ்வின் கட்டளையை அவர்கள் செயல்படுத்து கிறார்களா? என்று பார்ப்பதற்காக அவர்கள் முன்

நெருப்பை உயர்த்தி இதில் நுழையுங்கள் என்று கூறப்படும். அவ்வாறு நுழைந்தோருக்கு அந்நெருப்பு குளிர்ந்து சாந்தி மயமானதாக ஆகிவிடும் நுழைய மறுத்தோரை வலுக்கட்டாயமாக அதனுள் தள்ளப்படும்.

நபி ﷺ அவர்கள் குடும்பத்தினர் யாவரும் ஈடேற்றம் பெற்று நஜாத்து பெறுவார்கள் என நம்பிக்கை வைத்துள்ளோம். இப்படிப்பட்ட ரிவாயத் துடைய வரிசையை தனி அத்தியாயமாக எழுதப் பட்டுள்ளது. அது தனிபாகமாக உள்ளது.

அப்துல் முத்தலிப் முதல் திருநபி ﷺ அவர்கள் குடும்பத்தினர் வரை யாவரும் ஈடேற்றம் பெற்று நஜாத் பெறுவார்கள் என நம்பிக்கை வைத் துள்ளோம்.

எனினும் அபூதாலிப் அவர்கள் நபித்துவம் வெளிப் பட்ட பிறகும் நபியைக் கொண்டு ஈமான் கொள்ள வில்லை. இதன் அடிப்படையில் அபூதாலிப் அவர்கள் நரகத்தில் ஸஹ்ஸாஹ் என்ற இடத்தில் இருப்பதாக புஹாரி ஷரீஃப் கூறுகிறது. இதுகுறித்து மேலும் விபரம் ''பரீட்சிக்கப்படும் சம்பவத்தில்'' எழுதியுள்ளதை நீங்கள் காணலாம்.

மேலே கூறப்பட்ட இமாம் இப்னுஹஜர் அஸ் கலானி ரஹ்மத்துல்லாஹி அலைஹியவர்களின் சிறப்பு மிக்க இக்கூற்றைப் பற்றி இமாம் ஜலாலுத்தீன் சுயூத்தி ரஹ்மத்துல்லாஹி அலைஹியவர்கள் கருத்து தெரிவிக் கும் போது அது பரிபூரணமானதும், வெளிப்படை யானதுமாகும் என்று கூறுகிருர்கள்.

இது சம்பந்தமாக மிக நுட்பமான கருத்துக்கள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. ஆராய்ச்சியாளருக்கு இது ஒரு மறைவான காரியமல்ல.

நாம் அவர்களுக்கு மத்தியில் ரசூலை அனுப்பாத வரை அவர்களைத் தண்டிக்கப் போவதில்லை என்ற வசனத்தை மையமாக அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் சட்டக்கலை நிபுணர்கள் ''நபித்துவத்திற்கு முன் மரித்தோரை அல்லாஹ் தண்டிக்க மாட்டான்'' என ஒன்றுபட்டுக் கூறியுள்ளார்கள்.

இத்திருமறை வசனத்தை ஆதாரமாகக்கொண்டே தீய கொள்கையுடைய முஃதஸிலாக்களுடைய கருத்துக்களும், அவர்களை தங்களின் வழிகாட்டிகளாக கொண்டவர்களின் கருத்துகளும் ரத்து செய்யப் பட்டுள்ளது.

மேலும் இத்திருமறை வசனத்திற்கு ஹழ்ரத் கதாதா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், ''சந்தேகமின்றி அல்லாஹு தஆலா மக்களுக்கு அறிவிப்பையும், அத்தாட்சியையும் வழங்காத வரை தண்டிக்க மாட் டான்'' என கருத்து கூறியுள்ளார்கள்.

இதனை இப்னு ஜரீர் இப்னு அபீஹாதிம் ஆகியோர் தத்தமது தஃப்ஸீர்களில் பதிவு செய்துள்ளார்கள்.

**வசனம் இரண்டு :**

ذالك أن لم يكن ربّك مهلك القرى بظلم واهلها غافلون

(الانعام - ٦)

(அநியாயம் புரிந்தோரின்) ஊர்களை (அவர்கள் புரிந்த) அநியாயத்திற்காக அதிலிருப்போர் எச்சரிக்கை அற்று இருக்கும் நிலையில் (நபியே!) உங்கள் இறைவன் அழிப்பதில்லை.

அல்லாமா ஷர்கசீ அவர்கள் ஷரஹ் ஜம்உல்

ஜவாமியில் மேலே கூறிய திருமறை வசனத்தை தனது கூற்றுக்கு ஆதாரமாக கையாண்டுள்ளார்கள்.

**நன்றி செலுத்தும் முறை :**

நிரந்தரமாக கருணை புரியும் அல்லாஹ்விற்கு நன்றிக் கடமை புரிவது (அந்த கருணை நம்மீது புரியப்பட்டுள் ளது என்பதை) உணர்ந்த பிறகு மாத்திரம் அல்ல. அவன் அருள் புரிந்துள்ளான் என்று கேட்டதுமே அவனுக்கு நன்றி செலுத்துவது நம்மீது கடமை என்றும் குறிப்பிடுகிறார்கள்.

**வசனம் மூன்று :**

ولولا ان تصيبهم مصيبة بما قدّمت ايديهم فيقولوا ربّنا لولا ارسلت الينا رسولا فنتّبع آياتك ونكون من المؤمنين

அவர்களின் கரங்கள் முற்படுத்திய தீவினையின் காரணமாக அவர்களுக்கு ஏதேனும் சோதனை வரும் போது அவர்கள்; எங்கள் இறைவா! நீ எங்கள் அளவில் ஒரு தூதரை அனுப்பி வைத்திருக்க வேண்டாமா? (அப் படி அனுப்பியிருந்தால்) நாங்கள் உன் வசனங்களைப் பின்பற்றி மூஃமின்களாயிருப்போமே! எனக் கூறாதிருக் கும் பொருட்டே (நபியே! உங்களை அவர்களிடையே தூதராக அனுப்பினோம்.)

இந்த வசனத்தையும் அல்லாமா ஷர்கஷி அவர்கள் தங்களது 'மௌகூஃப்' எனும் நூலில் நபிமார்கள் அனுப்பப்படாதவரை யாரும் அழிக்கப்படுவதில்லை என்பதற்கு ஆதாரமாக விளக்கிக் காட்டியுள்ளார்கள்.

ஹழ்ரத் இப்னு அபீஹாதிம் அவர்கள் மேலே கூறப் பட்ட திருமறை வசனத்திற்கு விளக்கம் எழுதுகையில்,

الهالك فى الفترة يقول ربّ لم يأتني كتاب ولّا رسول

ஃபத்ரத்தில் மரணித்தவர்கள் கியாம நாளில் இறைவனிடம் எங்கள் இறைவா! எங்கள் இரட்சகா! எங்களிடம் உனது ரசூலோ உனது கட்டளையோ வேதமோ வரவில்லையே என்பார்கள் என்ற ஹழ்ரத் அபூ ஸயீதுனில் குத்ரிய்யீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கும் நபிமொழியை கூறிவிட்டு இவ்வசனத்தை குறிப்பிட்டுள்ளார்கள்.

**வசனம் நான்கு :**

ولو انّا اهلكناهم بعذاب من قبله لقالوا ربّنا لولا ارسلت

الينا رسولا فنتّبع آياتك من قبل ان نذلّ ونخزى (طه - ١٣٤)

இன்னும் (நம் தூதர்) வருவதற்கு முன், நாம் இவர்களை வேதனை செய்து அழித்திருந்தால், அவர்கள், எங்கள் இறைவனே! நீ எங்களுக்கு ஒரு தூதரை அனுப்பியிருக்க வேண்டாமா? அவ்வாருயின் நாங்கள் சிறுமைப்படுவதற்கும், கேவலப்படுவதற்கு முன்னும் உன் வசனங்களைப் பின்பற்றியிருப்போமே என்று கூறுவர்.

இந்த ஆயத்திற்கு இமாம் இப்னு அபீ ஹாதிம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் விளக்கம் அளிக்கையில்,

الهالك في الفترة يقول ربّ لم يأتني كتاب ولّا رسول

என்ற (முன்வந்த) ஹதீதை ஹழ்ரத் அதிய்யாபின் அவ்ஃப் ரலியல்லாஹு அன்ஹு கூறியதாக குறிப்பிட்டு விட்டு மேற்கூறிய ஆயத்தை ஓதிக்காட்டினுர்கள்.

**வசனம் ஐந்து :**

وماكان ربّك مهلك القرى حتّى يبعث في امّها رسولا يتلوا

عليهم آياتنا

நபியே! நம் வசனங்களை ஓதிக் காண்பிக்கும் தூதர் ஒருவரை அவர்களுடைய தலைநகருக்கு அனுப்பி வைக்காத வரையில் ஊர்களில் எதனையும் உமது இறைவன் அழிப்பவனாக இல்லை.

இந்த வசனத்திற்கு இமாம் இப்னு அபீஹாதிம் அவர்கள் விளக்கம் அளிக்கையில் கீழ்காணும் ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு, ஹழ்ரத் கதாதா ரலியல்லாஹு அன்ஹு ஆகியோர் கூறிய செய்தியை ஆதாரமாக கொண்டு வருகிறார்கள்.

والا لم يهلك الله تعالى اهل مكّة حتّى بعث اليهم محمّدا
صلّى الله عليه وسلّم فلمّا كذبوا ظلموا فبذالك هلكوا

அல்லாஹுதஆலா முஹம்மத் ﷺ அவர்களை அனுப்பாதவரை மக்காவாசிகளை அழிக்கவில்லை. அவர்களை அனுப்பிய பின்னர் அவர்களை (ஏற்காமல்) பொய்ப்பித்து அநீதம் இழைத்ததன் காரணத்தினாலே அவர்கள் அழிக்கப்பட்டார்கள்.

**வசனம் ஆறு :**

وهذا كتاب انزلناه مبارك فاتّبعوه واتّقوا لعلكم ترحمون
أن تقولوا انّما انزل الكتاب على طائفتين من قبلنا وان كنّا عن دراستهم
لغافلين (الانعام - ١٥٥،١٥٦)

(மனிதர்களே!) இது வேதமாகும். இதனை நாமே இறக்கி வைத்தோம். இதுமிக்க பாக்கியம் வாய்ந்தது. ஆகவே இதனைப் பின்பற்றுங்கள். இன்னும் (அல்லாஹ்வை) அஞ்சி (பாவத்தை விட்டு விலகிக்) கொள்ளுங்கள். (அவ்வாறு நடந்தால் இறைவனால்) நீங்கள் கிருபை செய்யப்படுவீர்கள்.

நமக்கு முன் இக்கூட்டத்தாரின் மீது வேதம் இறக்கப் பட்டது. ஆனுல் நாங்கள் அதனைப் படிக்கவும் கேட்க வும் முடியாமல் பாராமுகமாகி விட்டோம் என்று நீங்கள் கூருதிருக்கவும் (இந்த வேதத்தை நாம் இறக்கினேம்.)

**வசனம் ஏழு :**

وما اهلكنا من قرية الالها منذرون ذكرى وماكنا ظالمين

(الشعراء - ٢٠٨، ٢٠٩)

இன்னும் எந்த ஊரையும் அதனை (அவ்வூர்வாசி களை) எச்சரிப்பவர்கள் இல்லாமல் நாம் அழித்ததில்லை. ஞாபகமூட்டுவதற்காகவே (நபிமார்கள் வந்தார்கள்) நாம் அநியாயம் செய்வோராக இல்லை.

இவ்வசனத்திற்கு விளக்கமளிக்கும் அப்துல்லாஹ் இப்னு ஹுமைத், இப்னு முன்திர், இப்னு அபீஹாதிம் ஆகியோர் தத்தமது தஃப்ஸீர்களில் கீழ்வரும் ஹழ்ரத் கதாதா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் மூலமாக அறிவிக்கப்பட்ட ஹதீதை ஆதாரமாக கொண்டு வருகிருர்கள்.

ما اهلك الله من قرية الا من بعد الحجّة والبيّنة والعذر حتّى يرسل الرّسل وينزل الكتب تذكرة لهم وموعظة وحجة الله ذكرى وما كنا ظالمين يقول ما كنا لنعذّبهم الا من بعد البيّنة والحجة

எக்கிராம மக்களையும், அவர்களுக்கு மத்தியில் தெளிவான ஆதாரங்களையும் அத்தாட்சிகளையும் வழங் கிய பிறகே அன்றியும் அவர்களுக்கு உபதேசமாகவும், ஞாபகமூட்டவும் ரசூல்மார்களை அனுப்பியும், வேதங் களை அளித்துமே அன்றியும் அல்லாஹ் அழித்ததில்லை. இதற்கு ஆதாரமாக,

ذكرى وما كنّا ظالمين

என்ற வசனம் உள்ளது. அதாவது:- அவர்களிடையே அத்தாட்சியும், தெளிவும் வழங்கப்படாதவரை அவர்களை நாம் வேதனை செய்வோராக இல்லை என்று வல்ல அல்லாஹ் இதன்மூலம் அறிவிக்கிறான்.

**வசனம் எட்டு :**

وهم يصطرخون فيها ربّنا اخرجنا نعمل صالحا غيرالّذي كنّا نعمل اولم نعمّركم ما يتذكّر فيه من تذكّر وجاءكم النذير

அதில் அவர்கள் பெரும் சப்தமிட்டு எங்கள் இறைவனே, (இதிலிருந்து) எங்களை வெளியேற்றி விடு. நாங்கள் செய்து கொண்டிருந்த (தீய) வைகள் அல்லாத நற்கருமங்களையே (இனி) செய்வோம் என்று கூறுவர்.

இத்திருமறை வசனத்தின் மூலம் அல்லாஹுதஆலா அண்ணல் கண்மணி ﷺ அவர்களின் நபித்துவத்தை ஹுஜ்ஜத்தாக எடுத்துக் காட்டியுள்ளான். இங்கே (நதீர்) 'அச்சமூட்டி எச்சரிப்பவர்' எனக் குறிக்கப்படுவது நபிகள் ﷺ அவர்களையே.

இதுவரை இடைஇடையே சில ஹதீதுகள் உட்பட திருமறை வசனங்களைக் கொண்டான ஆதாரங்களை முன் வைத்தோம். அடுத்து ஹதீதுகளின் மூலம் ஆதாரங்களை முன் வைக்கிறோம்.

# ஹதீது அடிப்படையிலான ஆதாரங்கள் :

கியாம நாளில் ஃபத்ரத்துடைய காலத்தில் மரணித்தவர்கள் பரிசோதனைக்குட்படுத்தப்படுவார்கள். அவர்களில் எவர் வழிபடுகிறாரோ அவர் சுவனத்திற்கும், வழிபடாது பின் தங்கியவர் நரகத்திற்கும் அனுப்பப்படுவார். (இச்சாராம்சத்தை நினைவில் கொண்டு கீழ்வரும் ஹதீதுகளை படிக்கத் துவங்குங்கள்.)

**ஹதீது இலக்கம் ஒன்று :**

أنّ النبيّ صلّى اللّه عليه وسلّم قال اربعة يحتجون يوم القيامة... رجل اصم لايسمع شيئًا ورجل احمق ورجل هرم ورجل مات فى الفطرة. واما الاصم فيقول رب لقد جاء الاسلام والصبيان يحذفوني بالبعر واما الهرم فيقول رب لقد جاء الاسلام وما اعقل شيئًا واما الذي مات فى الفطرة فيقول رب ماتاني لك رسول. فيأخذ مواثقهم ليطيعونه فيرسل اليهم ان ادخل النار فمن دخلها كانت عليه بردا وسلاما ومن لم يدخلها يستجر اليها

ஹழ்ரத் அஸ்வத் பின் சரீஃ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவித்த இந்த ஸஹீஹான ஹதீதை இமாம் அஹ்மதுப்னு ஹன்பல் ரலியல்லாஹு அன்ஹு இமாம் இஸ்ஹாக் இப்னு ராஹவிய்யா ரலியல்லாஹு அன்ஹு ஆகியோர் தத்தமது முஸ்னதிலும் இமாம் பைஹகீ ரலியல்லாஹு அன்ஹு தமது கிரந்தமான

கிதாபுல் இஃதிகாதிலும் பதிவு செய்துள்ளார்கள்.

**பொருள் :**

கியாம நாளில் நான்கு விதத்தினர் பரீட்சித்துப் பார்க்கப்படுவார்கள் என வள்ளல் நபி صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் திருவாய் மலர்ந்தருளினர்கள். அவர்கள் யாரெனில் செவிப்புலனற்ற செவிடன், சிந்திக்கும் சக்தியற்ற மடையன் (புத்தியற்றவன்) எழுந்து நடக்க சக்தியற்ற வயோதிகன், இஸ்லாமின் காலத்தை அடை யாது ஃபத்ரத்துடைய காலத்திலேயே மரணித்தவன் ஆகியோர் ஆவர். (இவர்கள் தங்கள் இறைவனிடம் மறுமையில் இவ்வாறு முறையிடுவர்)

(1) செவிடன் :

என் ரப்பே! நிச்சயமாக நான் இஸ்லாமிய காலத்தை அடைந்த போதும் என்னல் எதனையும் கேட்க முடியாது போயிற்றே!

(2) மடையன் :

என் இரட்சகனே! நிச்சயமாக என் காலத்தில் இஸ்லா மிய அழைப்பு வந்திருந்தும் அதனை பகுத்தறியும் சக்தி யற்று, சிறுவர்கள் கல்லால் எறிந்து விளையாடும் விளை யாட்டுப் பொருளாயிருந்திட்டேனே!

(3) வயோதிகன் :

என் ரப்பே! சந்தேகமின்றி என் காலத்தில் இஸ்லாம் வந்திருந்தது. எனினும் அதனை அறிந்து உணரும் சக்தியற்ற சிறுவர் போன்று இருந்து விட்டேனே!

(4) ஃபத்ரத்தின் காலத்தில் இறந்தவன் :

என் ரப்பே! எனது காலத்தில் உன்னல் அனுப்பப் பட்ட எந்த நபியின், ரசூலின் தகவலும் இல்லாமல் போயிற்றே என்பார்கள்.

இறுதியாக இவர்களிடம் இப்போது நான் ஏதேனும் கூறினுல் நீங்கள் வழிப்படுவீர்களா என (இறைவன்) கேட்க (அவர்கள்) ஆம் என்று வாக்குறுதி வழங்க நரகத்திற்கு நீ சாந்தமாயிரு என சொல்லப்படும். பின்னர் அந்நெருப்பில் நுழையுமாறு அவர்களுக்கு கட்டளை பிறப்பிக்கப்படும். நுழைய மறுப்போர் (உண்மையில்) செல்லும் தளம் நரக நெருப்பாகும்.

## ஹதீது இலக்கம் இரண்டு :

மேற்கூறப்பட்ட அஸ்வத் இப்னு சரீஃ ரலியல் லாஹு அன்ஹு அவர்கள் அறிவித்தது போன்று ஒரு ஹதீதை ஹழ்ரத் அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிருர்கள். இதனை ஹழ்ரத் இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் ரலியல்லாஹு அன்ஹு ஹழ்ரத் இஸ்ஹாக் இப்னு மர்துவிய்யா, ராஹவிய்யா அல் இஸ்பஹானி தமது தஃப்ஸீரிலும், இமாம் பைஹகீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அல் இஃதி காதிலும் பதிவு செய்துள்ளார்கள்.

## ஹதீது இலக்கம் மூன்று :

ஹழ்ரத் அபூ ஸயீதில் குத்ரிய்யி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கும் கீழ்வரும் ஹதீதை ஹழ்ரத் பஸ்ஸார் ரஹ்மத்துல்லாஹி அலைஹி தமது முஸ்னது பஸ்ஸாரில் பதிவு செய்துள்ளார்கள்.

قال رسول الله صلّى الله عليه وسلّم يؤتي بالهالك في الفترة
والمعتوه والمولود فيقول الهالك في الفترة لم يأتني كتاب ولا رسول
ويقول المعتوه أي رب لم تجعل لي عقلا اعقل به خيرا ولا شرا
، ويقول المولود لم ادرك العمل قال فيرفع لهم نار فيقال
لهم . . . ردّوها او قال ادخلوها فيدخلها من كان في علم الله